# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2029/15 - 2017 ජූලි මස 25 වැනි අඟහරුවාදා - 2017.07.25

*2029/15 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால், (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2017, சனவரி மாதம் 27 ஆந் திகதிய 2003/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2017, சனவரி மாதம் 27 ஆந் திகதி தாபிக்கப்பட்ட , 2015, பெப்புருவரி 01ஆந் திகதியிலிருந்து 2016, மாச்சு 31 ஆந் திகதி வரையான கால எல்லைக்குள் திறைசேரிப் பிணை முறிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்தல், புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் பற்றிய சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தற்போதைய பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய 2017, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி முடிவுற்ற மூன்று மாத காலமானது, அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு 2017, யூலை மாதம் 27 ஆந் திகதி வரை 03 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டு, மீண்டும் ஒரு முறை எதிர்வரும் 03 மாத காலத்துக்கு, அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

ஒஸ்டின் பர்ணாந்து,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2017, யூலை 24.

8- 283